தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நத்தம் பகுதியில் மழை: உழவுப் பணிகளில் விவசாயிகள் ஆர்வம்

நத்தம் பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் விவசாயிகள், விவசாய பணிகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். நத்தம் பகுதியில் பருவமழை பொய்த்ததால், ஏரிகள் நீர் வரத்து இன்றி வறண்டன. இதனால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். கடந்த சில நாள்களாக மழை பெய்து வருவதாலும், ஏரிகளுக்கு ஓரளவு தண்ணீர் வந்துள்ளதாலும் விவசாயப் பணிகள் தொடங்கியுள்ளன. இந்நிலையில் விவசாயப் பணிகளுக்கு ஆள் கிடைக்காமல் பல இடங்களில் விவசாயிகள் அவதியடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயி முருகன் கூறியது: நத்தம் பகுதிகளில் மழையை மட்டுமே நம்பி பருத்தி, மக்காசோளம், கிழங்கு போன்ற மானாவாரி பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். கடந்த காலங்களை விட இந்தாண்டு உழவு கூலி, ஆள் கூலி, விதை, பயிர் ஆகியவற்றின் விலை உயர்வு விவசாயிகளை கவலை கொள்ள வைத்துள்ளது. மேலும் உரம், பூச்சிக்கொல்லி மருந்து, களையெடுப்பு என உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், செலவு செய்யும் அளவுக்கு லாபம் கிடைக்குமா என்ற கவலையும் மேலோங்கி உள்ளது. எனவே தேவையான உதவிகளை அரசு செய்து தர வேண்டும் என்றார்.

### சம்பா சாகுபடி முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனை

சம்பா சாகுபடி முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தலைமையில் திங்கள்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. வேளாண், வேளாண் பொறியியல் துறை, கூட்டுறவுத் துறை, முன்னோடி வங்கிகளின் அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் பேசியது: அரியலூர் மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி மேற்கொள்ள அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. முதல்வரின் அறிவிப்பைத் தொடர்ந்து சம்பா விதைப்புப் பணிகள் அரியலூர் மாவட்ட டெல்டா பகுதிகளான திருமானூர், தா. பழூர், ஜயங்கொண்டம் வட்டாரங்களில் மேற்கொள்ளப் படுகிறது. சம்பா பருவத்துக்கு போதுமான நெல் சான்று விதைகள் 222 டன் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தொடக்க வேளாண் கூட்டுறவு மையங்கள், தனியார் நிறுவனங்கள் மூலம் தரமான

விதைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரியலூர் மாவட்ட வேளாண் விரிவாக்க மையங்களில் 41,400 டண் உயிர் உரங்கள் மற்றும் 0.75 டன் நுண் உரங்கள் போதுமான அளவு இருப்புள்ளது. சம்பா சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி முறை மூலம் அதிக மகசூல் ஒற்றை நாற்று நடவு மூலம் ஒரு ஏக்கரில் 4 டன் பெற முடியும். சம்பா பருவத்தில் டெல்டா பகுதிகளில் திருந்திய நெல் சாகுபடி 25 கிராமங்களில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. சம்பா சாகுபடி முனைப்பு இயக்கக் கூட்டங்கள் கடந்த 9 ஆம் தேதி தொடங்கப்பட்டு 31 ஆம் தேதி வரை திருமானூர், தா.பழூர் ஜயங்கொண்டம் வட்டாரங்களில் நடத்தப்படவுள்ளன. இதில் வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம். வங்கிகளில் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கிட அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்வர். எனவே விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சம்பா சாகுபடியைச் சிறப்பாக மேற்கொள்ளலாம் என்றார் ஆட்சியர். மாவட்ட வேளாண் இணை இயக்குநர் குணசேகரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆர். விஸ்வநாதன், முன்னோடி வங்கி மேலாளர் முரளிதரன், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## <u>இந்திய பருத்தி சம்மேளனம் சார்பில் கோவையில் ஆக.12-இல் மாநாடு</u>



இந்திய பருத்தி சம்மேளனம் சார்பில் கோவையில் இம்மாதம் 12 மற்றும் 13-ஆம் தேதிகளில், இப்போதைய சூழ்நிலையில் இந்தியப் பருத்தியின் நிலை என்ற தலைப்பில் மாநாடு நடைபெற உள்ளது. இது தொடர்பாக, இந்திய பருத்தி சம்மேளனத் தலைவர் ஜெ.துளசிதரன், துணைத் தலைவர்கள் கே.என்.விஸ்வநாதன், பி.நடராஜ், கௌரவச் செயலர் அதுல் பி ஆஷர் ஆகியோர்

கோவையில் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியது: உலக அளவில் சீனாவுக்கு அடுத்தபடியாக, இரண்டாவது பருத்தி உற்பத்தி செய்யும் நாடு இந்தியா. ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவில் பருத்தி விளைச்சல் அதிகரித்து வருகிறது. உள்நாட்டுத் தேவையும், ஏற்றுமதியும் அதிகரித்து வருகிறது. இரண்டாவது முறையாக கோவையில் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் பங்கேற்க நாடு முழுவதும் இருந்து சுமார் 400-க்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்துள்ளனர். தொடக்க விழாவில், கோவை பாரதிய வித்யா பவன் தலைவர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் சிறப்புரையாற்றுகிறார். சர்வதேச பருத்தி சங்கத் தலைவர் மொஹித் டி ஷா, கோடக் கமாடிட்டீஸ் தலைவர் சுரேஷ் ஏ கோடக், மும்பை பத்ரேஷ் டிரேடிங் கார்ப்பொரேசன் நிர்வாக இயக்குநர் பத்ரேஷ் மேத்தா ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட உள்ளது.

சைமா தலைவர் டி.ராஜ்குமார், மும்பை இந்திய பருத்தி சங்கத் தலைவர் திரன் என் ஷேத் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளனர். மாநாட்டின் இரண்டாம் நாளான ஆக.13-இல் ஜின்னர்கள், ஸ்பின்னர்கள், இடைத்தரகர்கள் பேச உள்ளனர்.

## <u>மானிய விலையில் வளர்ப்புக் கோழிகள்</u>

வில்லியனூரில் அரசு கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் பொது மக்களுக்கு மானிய விலையில் வளர்ப்புக் கோழிகள் வழங்கினர். வில்லியனூர் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற விழாவுக்கு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் பத்மநாபன் தலைமை வகித்து பயனாளிகளுக்கு கிரிராஜா இன வளர்ப்புக் கோழிகளை வழங்கினார். வில்லியனூர் கொம்யூன் கால்நடை மருத்துவர் குமாரவேலு வரவேற்றார். கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் குணசீலன் முன்னிலை வகித்தார். விழாவில், வில்லியனூர், மங்கலம், கூடப்பாக்கம், ஊசுட்டேரி உள்ளிட்டப் பகுதிகளைச் சேர்ந்த 300 பயனாளிகளுக்கு 800 கோழிகள் வரை வழங்கப்பட்டன.

கோழி வளர்க்கும் பயனாளிகளை ஊக்கப்படுத்தும் விதத்திலும், வருமானம் பெறும் விதத்திலும், பயனாளிகளுக்கு மானிய விலையில் தலா ரூ.54-க்கு இந்த கோழிகள் வழங்கப்பட்டன.

## <u>வெங்காயம், உருளைக்கிழங்கு நேரடி விற்பனை</u>

வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலையேற்றத்தை கட்டுப்படுத்தும் நோக்கில், அவற்றை வாகனங்கள் மூலம் பொதுமக்களுக்கு நேரடியாக குறைந்த விலையில் விற்பனை செய்யும் முறையை தில்லி அரசு தொடங்கியுள்ளது. தில்லி

யில் வெங்காயம், உருளைக்கிழங்கு, தக்காளி ஆகியவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. மேலும், நகரின் பல பகுதிகளில் இவற்றுக்கு கடும் தட்டுப்பாடும் நிலவி வருகிறது. காய்கறிகளை வியாபாரிகள் பதுக்கி வைப்பதாகவும் புகார்கள் எழுந்தன. இதனால், பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். பதுக்கல் வியாபாரிகளைக் கண்டறிய மத்திய அரசும், தில்லி அரசும் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்த நிலையில், பொதுமக்களின் நலன் கருதி விவசாயிகளிடம் இருந்து காய்கறிகளை நேரடியாகக் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் திட்டம் அறிமுகம் செய்யப்படும் என்று தில்லி அரசு அறிவித்திருந்தது. இதன்படி இந்தத் திட்டத்தை தில்லி அரசு திங்கள்கிழமை தொடங்கியது. இதன் ஒரு பகுதியாக தில்லி ராஜ் நிவாஸில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெங்காயம், உருளைக்கிழங்குகள் ஏற்றப்பட்டு விற்பனைக்கு அனுப்புவதற்கு தயாராக இருந்த ஆறு வாகனங்களை துணைநிலை ஆளுநர் நஜீப் ஜங் தொடக்கி வைத்தார். மத்திய விவசாயத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் தில்லி விவசாய விளைபொருள் விற்பனை வாரியம், சிறுவிவசாயிகள் வேளாண் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றை தில்லி அரசுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெங்காயம் கிலோ ஒன்றுக்கு ரூ.25-க்கும் உருளைக்கிழங்கு கிலோ ஒன்றுக்கு ரூ.23-க்கும் விற்பனை செய்யப்படும். இந்த வாகனங்கள் நகரின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று அவற்றை விற்பனை செய்யும். இது குறித்த மேலும் தகவல்களைப் பெறுவதற்கு தில்லி அரசை குடியிருப்பு நலச் சங்கங்களை தொடர்பு கொள்ளலாம் என்று அரசு தெரிவித்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மேட்டூர் அணை நீர்மட்டம்:113.39 அடி</u>**

மேட்டூர்:மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 1 அடி உயர்ந்து இன்று 113.39 அடியாக இருந்தது.நேற்று 79.49 கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை 80 கன அடியாக அதிகரித்துள்ளது.

## 'இந்தியன் செர்ரி' சீசன் துவக்கம்

பந்தலூார் : நீலகிரி மாவட்டத்தில் விளைந்துள்ள 'இந்தியன்செர்ரி' பழங்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் கூடலுார் மற்றும் பந்தலுாரில் குறிப்பிட்ட இடங்களில், 'இந்தியன் செர்ரி' பழங்களுக்கு தற்போது சீசன் துவங்கி உள்ளது.தற்போது, பந்தலுாரில் டான்டீ ஓய்வு விடுதி வளாகத்தில் பழங்கள் விளைந்துள்ளன. 'மல்த்ஜியா' எனும் தாவரவியல் பெயரை கொண்ட இந்த பழங்களில், வைட்டமின் 'சி' சத்து அதிகம் உள்ளது. புளிப்பு மற்றும் இனிப்பு சுவை கொண்ட இந்த பழங்கள். காயாக இருக்கும் போது பச்சை நிறத்திலும், பழுக்கும் நிலையில் மஞ்சள் நிறத்திலும், பின் சிவப்பு நிறத்திலும் மாற்றம் அடைகிறது. இந்த பழங்கள் உண்பதற்கு மிகவும் ருசியாக இருப்பதால், குறைந்த அளவே விளைந்துள்ள இந்த பழங்களுக்கு, கூடலுார், பந்தலுார் பகுதியில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

## துவக்கம்! : ஒருங்கிணைந்த வாழை வளாகத்தில்... : முதல் நாளில் ரூ. 1.60 லட்சத்துக்கு ஏலம்

திருச்சி: திருச்சி அருகே, திருசெந்துறையில் புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த வாழை வளாகத்தில், மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ முன்னிலையில், நேற்று வாழைத்தார் ஏலம் துவங்கியது. வாழை மரத்தின் அனைத்து பாகங்களும், வணிக ரீதியாக பயன்படுவதால், உலகம் முழுவதும் வாழை உற்பத்தி அதிகரித்து வருகிறது. உலக அளவில் சாகுபடி செய்யப்படும், 97.3 மில்லியன் மெட்ரிக் டன் வாழை உற்பத்தியில், இந்தியாவில், 30 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில், ஒரு லட்சத்து, 13 ஆயிரத்து, 681 ஹெக்டேரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில், 8,534 ஹெக்டேரில் வாழை பயிரிடப்பட்டு, மூன்று லட்சத்து, 83 ஆயிரத்து, 429 டன்கள் சாகுபடி செய்யப்படுகிறது. முசிறி, தொட்டியம், மண்ணச்ச நல்லூ ர், அந்தநல்லூர், மணிகண்டம், லால்குடி, திருவெறும்பூர் உள்ளிட்ட பகுதி களில் வாழை அதிகளவில் பயிரிடப்படுகிறது. வாழை அறுவடைக்கு பின், செய் நேர்த்தி மற்றும்

சந்தை சார்ந்த விற்பனை, பாதுகாப்பு அம்சங்கள் இல்லாதது போன்ற காரணங்களால், 10 டன் வாழைத்தார்களில், 200 கிலோ வரை வீணாகிறது என, விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இதையடுத்து, தேசிய வேளாண் அபி விருத்தி திட்டத்தின் கீழ், ஜீயபுரம் அருகே திருச்செந்துறையில், ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகம், நான்கு கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ளது.

இதில், 15 நாள் முதல், ஒரு மாதம் வரை வாழையை பாதுகாப்பாக வைக்க, அமைக்கப்பட்ட குளிர்சாதன கிடங்கில், 1,000 ஆயிரம் டன் வாழையை பாதுகாக்க முடியும். மேலும், வாழையை கழுவி, மூடைகள் கட்டும் வசதிகள் கொண்ட அறைகள், வாழைத்தார்களை தரம் பிரிக்கும் அறைகள், பரிவர்த்தனை கூடம், ஜெனரேட்டர் அறை மற்றும், 15 கடைகள் கட்டப்பட்டுள்ளது. புதிய வாழை வளாகத்தில், வாழைத்தார்கள் ஏலம் விடப்படும் என, அறிவிக்கப்பட்டிருந்தது. இதையொட்டி, நேற்று காலை, 9 மணி முதல் வாழைத்தார்களை, விவசாயிகள் கொண்டு வந்தனர். 11 மணிக்கு, மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ முன்னிலையில், வாழைத்தார் ஏலம் விடப்பட்டது. அப்போது, வேளாண்மை வணிகம் துணை இயக்குநர் சந்திரசேகரன், வேளாண்மை அலுவலர் பிரபாகரன் ஆகியோர் உடனிருந்தனர். திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வளாகத்தில் நேற்று நடந்த, முதல் நாள் ஏலத்தில், 912 வாழைத்தார்கள் ஏலத்துக்கு வந்தது. அதிக பட்சமாக ஒரு தார், 450 ரூபாய்க்கும், குறைந்தப்பட்சமாக, 128 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, ஒரு லட்சத்து, 60 ஆயிரத்து, 695 ரூபாய் மதிப்பில் வாழைத்தார் விற்றது. ஏலத்தில், 18 விவசாயிகளும், ஒன்பது வியாபாரிகள் பங்கேற்றனர்.

## அக்கரைப்பட்டி சங்கத்தில் ரூ. 23 லட்சம் பருத்தி ஏலம்

ராசிபுரம்: அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 23 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு உட்பட்ட, அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி வளாகத்தில், நேற்று பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம், சேலம் உள்ளிட்ட பகுதியில் இருந்து, 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பருத்தி மூட்டைகளை

கொண்டு வந்தனர். இதில், 60 கிலோ கொண்ட, 802 சுரபி ரக பருத்தி மூட்டை ஏலத்திற்கு வந்தது. அதிகபட்சமாக, 8,278, குறைந்தபட்சமாக, 7,676 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 23 லட்சம் ரூபாய்க்கு பருத்தி மூட்டைகள் ஏலம் போனது. திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் ஆகிய பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று, பருத்தி மூட்டையை எடுத்து சென்றனர்.

## முட்டை விலை 265 காசாக சரிவு

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 265 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 275 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசு குறைத்து, 265 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 310, பெங்களூரு, 290, மைசூர், 300, ஹைதராபாத், 273, மும்பை, 313, விஜயவாடா, 280, கொல்கத்தா, 335, பர்வாலா, 275, டில்லி, 298. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர்கள், வியாபாரிகள் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை ஒரு கிலோ, 54 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை ஒரு கிலோ, 79 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## உற்பத்தி அதிகரிப்பால் முள்ளங்கி விலை சரிவு

சேலம்: முள்ளங்கி உற்பத்தி அதிகரித்ததால், அதன் விலையில், கிலோவுக்கு, 10 ரூபாய் சரிவு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் பெரிய காய்கறி மார்க்கெட்களான, சென்னை கோயம்பேடு, திண்டுக்கல் ஒட்டன்சத்திரம், சேலம் தலைவாசல்

ஆகியவற்றுக்கு தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூரில் இருந்து, முள்ளங்கி விற்பனைக்கு வருவது வழக்கம். கடந்த ஜூன் மாதத்தில், இந்த மார்கெட்களுக்கு தினம்தோறும், 150 லாரிகளில் விற்பனைக்கு வந்து கொண்டிருந்த முள்ளங்கி, ஜூலை முதல் வாரத்தில், 80 லாரிகளாக குறைந்தது. வரத்தில் திடீர் சரிவு ஏற்பட்டதை அடுத்து, விலையில் கடும் உயர்வு ஏற்பட்டது. அதனால், ஜூலை கடைசி வாரத்தில், தமிழக உழவர் சந்தைகளில், முள்ளங்கி ஒரு கிலோ அதிகபட்சமாக, 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், வெளி மார்க்கெட்டில் கிலோ, 28 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில், தற்போது, தர்மபுரியில் இருந்து, தமிழக காய்கறி மார்கெட்களுக்கு, முள்ளங்கி வரத்து அதிகரித்துள்ளது. வரத்து அதிகரித்ததை அடுத்து, அதன் விலையில், கிலோவுக்கு, 10 ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளது. நேற்றைய நிலவரப்படி, உழவர் சந்தையில் கிலோ, 10 ரூபாய்க்கும், வெளி மார்க்கெட்டில் கிலோ, 18 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## பலத்த மழை பெய்ததால் விவசாய பணிகள் துவக்கம்

முருக்கேரி: முருக்கேரி பகுதியில் பெய்த கன மழையால் விவசாயிகள் நெல் நாற்று விடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். முருக்கேரி பகுதியில் கடந்த வாரம் இரண்டு நாட்கள் கன மழை பெய்தது.ஏரி,குளங்களில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நிற்கின்றது. கிணற்றிலும் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. ஆண்டு தோறும் ஆடி மாதம் 18ம் தேதி விவசாயிகள் நெல் நாற்று விதைப்பது வழக்கம். இந்தாண்டு மழை பெய்யாததால் விவசாயிகள் ஆடிப்பட்டத்தில் நெல் விதைக்கவில்லை . தற்போது நாற்றங்கால் உழும் அளவிற்கு மழை பெய்ததால் விவசாயிகள் ஆடி பட்டம் மாறி நெல் விதைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## விவசாயிகளுக்கு விதை கிராம பயிற்சி

தர்மபுரி: பாப்பிரெட்டிப்பட்டி வேளாண்மைத்துறையின் மூலம், சித்தேரி மலையில் வாழும் விவசாயிகளுக்கு, விதை கிராம பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மைத் துறை துணை இயக்குனர் வேணுகோபால் தலைமை வகித்தார். வேளாண்மை

உதவி இயக்குனர் (பொ) அருணாகுமாரி பங்கேற்று, விதை கிராம பயிற்சியில், விதை உற்பத்தி மற்றும் அதன்சார்ந்த தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் செந்தில் முருகன், உதவி வேளாண்மை அலுவலர் ஜெயக்குமார் உள்பட பலர் பங்கேற்றனர். விதைகிராம பயிற்சிக்கான ஏற்பாட்டை, உதவி வேளாண்மை அலுவலர் முனியப்பன் செய்திருந்தார்.

## வேளாண் துறை திட்டம் குறித்து நம்பியூரில் ஆலோசனை கூட்டம்

கோபி: நம்பியூர் வட்டார வேள ாண் துறை சார்பில், வே ளாண் தொழில் நுட்ப மே லாண்மை முகமை திட்டம் குறித்து, விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய கூட்டுக்கூட்டம் வே ளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. உதவி இயக்குனர் ஆசைத்தம்பி, தலைமை வகித்து திட்டத்தின் நோக்கம், செயல்பாடு, வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டம் குறித்து பேசினார். வட்டார விவசாய ஆலோசனை குழு தலைவர் மணி முன்னிலை வகித்தார். ஈரோடு தோட்டக்கலை துணை இயக்குனர் (பொறுப்பு) கணேசமூர்த்தி, வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் வெள்ளியங்கிரி, கால்நடை உதவி மருத்துவர் வெள்ளியங்கிரி, வேள ாண் வணிகத்துறை வேளா ன் அலுவலர் கார்த்திகேய ன், பட்டுவளர்ச்சி துறை இ ளநிலை ஆய்வாளர் சந்திர ன் ஆகியோர் பங்கேற்றனர். கோசணம், மலையப்பாளையம், சின்னாரிபாளையம், மொட்டனம், சுண்டக்காம்பாளையம், கூடக்கரை உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த, 25க்கும் மேற்பட்ட விவசாய உறுப்பினர்கள், கூட்டுறவு அலுவலர்கள், இடுபொருட்கள் விற்பனையாளர்கள் கலந்து கொண்டனர். தொ ழில்நுட்ப மேலாளர் மோகனசுந்தரம் நன்றி கூறினார். சிறப்பறிஞர்கள் அருண்குமார் மற்றும் மணிகண்டன் ஆகியோர், ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## நடமாடும் மண் பரிசோதனை மையம்; கிராமங்களில் ஆலோசனை வழங்கல்

திண்டுக்கல் : நடமாடும் மண் பரிசோதனை மையத்தின் மூலம் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு, பயிர் சாகுபடி தொடர்பான ஆலோசனைகளை இலவசமாக வழங்க எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் முடிவு செய்துள்ளது. நடப்பு ஆண்டில் உணவு உற்பத்தி இலக்கினை பூர்த்தி செய்வதற்கான முயற்சியில்

வேளாண் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இணைந்து செயல்பட அரசு அறிவுறுத்தியுள்ளது. வறட்சியை தாங்கி மகசூலை அளிக்கும் விதைகள் மானியவிலையில் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகின்றன. தற்போது மண் மாதிரி ஆய்வுகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் பயிர்களை சாகுபடி செய்யவேண்டுமென களப்பணியாளர்கள் விவசாயிகளை வலியுறுத்தி வருகின்றனர். பெரும்பாலான விவசாயிகள் மண் மாதிரி ஆய்வு குறித்த விழிப்புணர்வு இல்லாதவர்களாக இருப்பதால், திண்டுக்கல்லில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் நடமாடும் மண் பரிசோதனை மையத்தின் மூலம் கிராமங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கான பணியில் விவசாய கல்லூரி மாணவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானி ஆனந்த் கூறுகையில், ""நொச்சிஓடைப்பட்டியில் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகளின் விளைநிலங்களில் இருந்து மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு நடமாடும் மண் பரிசோதனை மையத்தின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு அதற்கான அறிக்கைகள் விவசாயிகளிடம் அளிக்கப்பட்டு வருகிறது. சாகுபடி பரப்பினை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு முயற்சிகள் மையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது,'' என்றார்.

## <u>மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>

திண்டுக்கல் : சில தினங்களாக மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துவருவதால் விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் காலையில் கடுமையான வெயிலும் மாலையில் பரவலாக மழையும் பெய்து வருகிறது. நகர் பகுதியை தவிர்த்து மலை பகுதிகளில் தொடர்ச்சியாக மழை பெய்கிறது. நேற்று திண்டுக்கல் நத்தம் ரோட்டிலிருந்து சிறுமலை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் ஒருமணிநேரம் பலத்த மழை பெய்தது. திண்டுக்கல் நகர் பகுதியில் ஓரளவு மழை காணப்பட்டது. நகரில் முறையான வடிகால் வசதி இல்லாததால் ரோட்டில் ஆறு போல் மழை நீர் சென்றது. இதனால் வாகனங்கள் செல்வதில் சிரமம் ஏற்பட்டது. குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## வீட்டுத் தோட்டம் அமைக்க திருச்சி மாணவிகள் விளக்கம்

கூடலூர் : வீட்டுத் தோட்டம் அமைப்பது குறித்து திருச்சி தோட்டக்கலைக் கல்லூரி மாணவிகள் செயல்முறை விளக்கம் அளித்தனர். தற்போது காய்கறி விலை அதிகரித்துக் கொண்டே போவதால் விலை உயர்வை சமாளிப்பதற்கு வீடுகளில் காய்கறி தோட்டம் அமைப்பது அவசியம், என இக்கல்லூரி மாணவிகள் வினோதா, கலையரசி, சாந்தகுமாரி, திவ்யபாரதி, இந்துமதி, ஸ்ரீநிவி, சாவித்திரி ஆகியோர் விளக்கம் அளித்தனர். வீட்டில் தக்காளி, வெண்டை, கொத்தமல்லி, புடலை, குத்துமொச்சை, அவரை போன்ற காய்கறி வகைகளை எப்படி விவசாயம் செய்வது என்பது குறித்து செயல்விளக்கம் அளித்தனர். மேலும், வீட்டுத் தோட்டத்தில் மருந்தில்லாத சுத்தமான காய்கறிகளை இயற்கைவழி உரம் மூலம் பெறலாம். இவற்றை அன்றாட வாழ்விற்கு பயன்படுத்துவதால், குடும்பச் செலவு குறையும், என ஆலோசனை வழங்கப்பட்டது.

## வயல்வெளியில் உழவர் பள்ளி

தேனி: தேனி காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையம் மற்றும் சின்னமனூர் வட்டார வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகாம் சார்பில் சின்னமனூர் அருகே குச்சனூர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி குறித்த உழவர் பள்ளி நடந்தது. சின்னமனூர் வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் வினோத்குமார் வயல்வெளி பள்ளியின் நோக்கம் குறித்து விளக்கினார். சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் தொழில் நுட்ப வல்லுநர்கள் விஜயமுருகன், சித்ரா ஆகியோர் நெல் சாகுபடியின் தொழில் நுட்பம் பற்றி விளக்கம் அளித்தனர்.விவாசாயிகள் குழுக்களாக பிரிக்கப்பட்டு வயல்சூழல் ஆய்வு செய்தனர். ஏற்பாடுகளை குச்சனூர் விவசாய பரவு காவல் சங்க தலைவர் ஆதி நாராயணன் மற்றும் முத்து மாணிக்கவேல் செய்திருந்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஆழியார் அணையின் நீர் மட்டம் 105 அடியாக உயர்வு

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த ஆழியாறு அணையின் நீர்மட்டம் தற்போது 105 அடியாக உயர்ந்துள்ளது வினாடிக்கு .1500 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தில் சோலையாறு, பரம்பிக்குளம், ஆழியாறு, திருமூர்த்தி, அம ராவதி ஆகிய அணைகள் மிக முக்கியமானதாகும்ஆழியார் அணைக்கு கான்டூர் கால்வாய் மற்றும் . ற்போதுத .ஊட்டுக்கால்வாய் மூலமும் தண்ணீர் அதிகளவு வருகிறது, மேற்குதொடர்ச்சி மலைபகுதியில், தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவ தால் பிஏபி திட்ட அணை களில் நீர்மட்டம் கிடுகிடு என்று உயர்ந்துள்ளது. இதில், 120அடி கொண்ட ஆழியார் அணையின் நீர்மட்டம் பல மாதங்களுக்கு பிறகு 100 அடியை எட்டியதுது அதிகரித்துள்ளதால்தொடர்ந்து நீர்வரத் ., ஆழியாறு அணையின் நீர்மட்டம் நேற்று மதியம் 105 அடியை எட்டியது .

வினாடிக்கு1500 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதில் குடிநீர் தேவைக் காக மட்டும், வினாடிக்கு 80 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறதுள்ளதால் ஆழியார் தொடர்ந்து நீர் வரத்து அதிகரித்து . .அணை விரைவில் நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், ‘ஆழியார் அணையை சுற்றியுள்ள நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து தொடர் மழை காரணமாக அணைக்கு தண்ணீர் அதிகளவு வந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக 120 அடி கொண்ட

ஆழியார் அணையில் தற்போதைய நீர்மட்டம் 105 அடியை எட்டியுள்ளதுதொடர் . .மழை காரணமாக அணைக்கு நீர்வரத்து இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது ஆகவே விரைவில் அணை நிரம்பும் என்று எதிர்பார்க்கிறோம்' என்றனர்.

## <u>மழை அளவு குறைவதால் மாற்றுத்தொழில் செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் பயிற்சி முகாமில் யோசனை</u>

மணப்பாறை, : மழை அளவு குறைந்து வருவதால் விவசாயிகள் காளான் வளர்ப்பு, மலர் சாகுபடி போன்ற மாற்றத்தொழில் களை செய்ய வேண்டும் என்று வையம்பட்டி பொன்னனியாறு பாசன பகுதி விவசாயிகளுக்கு ஆலோ சனை கூறப்பட்டது. திருச்சி மாவட்டம் வையம்பட்டியில் பொன்னனியாறு அணை பாசனப்பகுதி விவசாயிகளுக்கான முன்பருவ ஒருங்கிணைப்பு பயிற்சி முகாம் தனியார் மண்டபத்தில் நடந்ததுமுகாமிற்கு முகவனூர் ஊராட்சி தலைவர் வேலு . கோவை வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் .சாமி தலைமை வகித்தார் .லட்சுமணன் வரவேற்றார் கோயமுத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் நீர்வள ஆதாரஅமைப்பு இணைந்து பொன்னனியாறு அணைப்பகுதியை தத்தெடுத்து அப் பகுதி விவசாயிகளுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி விதைத்தேர்வு, விதைநேர்த்தி, கூட்டு நாற்றாங் கால், பாய் நாற்றாங்கால், உயிர் உரங்கள் பயன்பாடு, செயற்கைஉர பயன்பாடு களை குறைத்தல், உயிர் பூச்சி மற்றும் நோய்க்கொல்லி முறைகள் குறித்து பயிற்சியும் தேவையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டதுபயிற்சியில் கோயமுத்தூர் வேளாண் . காலநிலை ஆராய்ச்சி மைய பேராசிரியர் பன்னீர்செல் வம் பேசுகையில், இந்தியாவில் முக்கிய தொழிலாக விவசாயம் விளங்குகிறதுஆனால் விவசாயம் . பெரிய இன்னல்களை சந்தித்து வருகிறதுமக்கள் தொகை பெருகிவரும் நிலையில் . இந்த நிலையில் விவ சாய தொழில் நுட்பத்தின் .விவசாய நிலம் குறுகி வரு கிறது மழை .காரணமாக குறுகிய பரப்பளவில் கூடுதல் விளைச்சலை பெற்று வருகிறோம் ந்து வரும் நிலையில் நவீன முறையில் விவசாயம் செய்யும் நிலை க்கு யும் குறை விவச◌ாயிகள் தள்ளப் பட்டு வருகின்றனர். உதாரணமாக சிறுக மணி 7 என்ற கரும்பு ரகம் கால சூழ்நிலையை கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு வசதியாக 12

மாதங்களுக்கு பதிலாக 11 மாத காலத்தில் அறுவடை செய்யும் நிலை யில் கரும்பு உற்பத்தி கண்டுபிடிக்கப்பட்டு பயிரிடப் பட்டு உள்ளதுமழ .ை அளவு குறைந்து வரும் நிலையில் விவசாயிகள் மாற்று தொழிலாக தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு, சிறு தானியங்களில் இருந்து சத்துமாவு தயாரித்தல், மலர் மற்றும் காய்கறி பயிர் கள் வளர்ப்பு போன்ற மாற் றுத் தொழில்களை செய்யவேண்டும் என்று கூறினார். பேராசிரியர் கீதாலட் சுமி பொன்னனியாறு பாசனப்பகுதியில் செயல்படுத்தப்பட உள்ள காலநிலை தகவமைப்பு முறைகள் குறித்தும், திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மண் அறிவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் பாலசுப்பிரமணி யம் மண்வளம் அறிதல் குறித்தும், திருச்சி நீர்வள ஆதாரஅமைப்பு உதவி செயற்பொறியாளர் மீனா ட்சி சுந்தரஅரசு நீர்மேலாண்மை தொடர்பான ஆராய்ச்சிகள் குறித்தும் பேசினர்விவசாய சங்க நிர்வாகிகள் பிலிப் ., ஞான சேகர், சின்னப்பன் உட்பட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## அமராவதி கால்வாயில் தண்ணீர் திருட்டு கடைமடை விவசாயம் பாதிப்பு

உடுமலை, : தென்னை மற்றும் நிலுவை பயிர்களை காக்க அமராவதி அணையில் இருந்து பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால் பெரும்பாலான விவசாயிகள் மோட்டார் பம்ப் வைத்து தண்ணீரை திருடுவதால் கடைமடை நிலத்துக்கு தண்ணீர் செல்வதில்லை. இதனால் ஆவேசம் அடைந்த விவசாயிகள் தண்ணீரை திருடும் மோட்டார் பம்புகள், குழாய்களை தீயிட்டு கொளுத்துவோம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். உடுமலை அருகே அமராவதி அணையில் இருந்து திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்குகிறது. ஆண்டுதோறும் ஜூன் முதல் மார்ச் வரை பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆற்று வழியாகவும், செப்டம்பர் முதல் ஜனவரி வரை புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. மழை போதிய அளவு பெய்யாததாலும், அடிக்கடி பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுவதாலும் பிரதான கால்வாய் பாசனம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது அணையில் ஓரளவு தண்ணீர்

இருப்பதால் தென்னைகளை காக்கவும், கால்நடைகளுக்கு குடிநீர் கிடைக்கவும் பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். மேலும் பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்க கோரி கடந்த 23ம் தேதி மடத்துக்குளம் நால்ரோட்டில் அனைத்துக் கட்சியினர் போராட்டம் நடத்தினர். இதைத்தொடர்ந்து பிரதான கால்வாயில் கடந்த 1ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இதை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென விவசாயிகளுக்கு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பிரதான கால்வாய் பாசனம் மூலம் மாவட்டத்தில் 25250 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பிரதான கால்வாயில் திறக்கப்பட்ட தண்ணீர் தாராபுரம் தாலுகாவில் உள்ள கோவிந்தாபுரம் வரை சுமார் 64 கி.மீட்டர் தூரத்துக்கு செல்கிறது. இதில் கடைமடை பகுதிக்கு தண்ணீர் சரியாக வருவதில்லை. குமரலிங்கம் உள்ளிட்ட பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் மோட்டார் பம்ப் பொருத்தி நீண்ட ஓஸ் போட்டு தண்ணீரை திருடுவதால் கடைமடை பகுதிக்கு தண்ணீர் வருவதில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். தண்ணீர் திருட்டை தடுக்க செல்லும் அதிகாரிகள் மிரட்டப்படுவதாகவும், போலீசில் இதுகுறித்து புகார் அளித்தால் அதை அவர்கள் கண்டு கொள்வதில்லை என்றும் வேதனைப்படுகின்றனர். தண்ணீர் திருட்டை தடுக்க தவறினால் பாதிக்கப்பட்ட கடைமடை விவசாயிகள் நேரடியாக களத்தில் இறங்கி தண்ணீர் திருட பயன்படுத்தப்படும் மோட்டார் பம்புகள், ஓஸ்(ரப்பர் குழாய் கள்) ஆகியவற்றை தீயிட்டு கொளுத்துவோம் என கூறியுள்ளனர்.

## <u>விதை சுத்திகரிப்பு நிலையங்களில் அதிகாரிகள் திடீர் ஆய்வு</u>

தாராபுரம், : தாராபுரம் பகுதியில் உள்ள தனியார் விதை சுத்திகரிப்பு நிலையங்களில், தரமான விதைகள் சுத்திகரிக்கப்படுகிறதா என்று விதைச்சான்று அதிகாரிகள் நேற்று அதிரடி ஆய்வு நடத்தினர். தாராபுரத்தில் விதை சான்றளிப்பு துறை மூலம் அனுமதி பெற்ற 36 தனியார் விதை சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன இதில் சான்று நெல் விதைகள் .அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தற்போது டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி துவங்குவதற்கு

விவசாயிகள் தயாராகி வருகின்றனர்டெல்டா பகுதிகளுக்கு ஏற்ற நெல் . ரகங்களுக்கு விதைத் தேவை அதிகம் இருப்பதால், இருப்பில் உள்ள நெல் விதைகளை உடனடியாக சுத்திகரிப்பு மற்றும் சான்று பணி முடித்து, விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகளை உரிய நேரத்தில் கிடைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் கோவை விதைச் சான்று இணை இயக்குநர் பழனிச்சாமி, ஈரோடு விதைச் சான்று உதவி இயக்குனர் சின்னச்சாமி, அலுவலர்கள் மாரிமுத்து, மோகனசுந்தரம், மணி, கோகுலவாசன், லதா உள்ளிட்டோர் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் அதிரடி ஆய்வு நடத்தினர். விதை கிடங்குகளில் இருப்பு உள்ள விதைகளில் பூச்சி தாக்குதல் இல்லாமல் விதைகளை பராமரிக்கவும், உரிய கால இடைவெளியில் புகை மூட்டம் மற்றும் மருந்து தெளித்து விதைகளின் முளைப்புத்திறன் பாதிக்காமல் பாதுகாக்கவும் அறிவுறுத்தப்பட்டது. உரிமம் வழங்கப்பட்ட தனியார் விதைச் சுத்திகரிப்பு நிலையங்களில், விதைச் சான்று நடைமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுகிறதா என்பது உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

## <u>காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை உடனே அமல்படுத்த வேண்டும்</u>

தாராபுரம், : தாராபுரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் ஆலோசனைக் கூட்டத்தில், காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை அமல்படுத்த தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தாராபுரத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டமைப்பின் பொருளாளர் பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். செயலாளர் நல்லசாமி, நிர்வாகிகள் கதிரேசன், முத்துரத்தினம், ரவி, பொடாரன், பெரியசாமி, அருணாசலம், கோபிநாத் தங்கராசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில், தமிழகத்தில் போதுமான பருவ மழை பெய்யாத காரணத்தால் கடுமையான வறட்சி நிலவி வருகிறது. எனவே தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும். மாநில அரசு திருப்பூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு போதிய நிவாரணம் வழங்க வேண்டும்.

தண்ணீர் இன்றி காய்ந்து போன தென்னை மரத்திற்கு தலா ரூ.10 ஆயிரமும், பனை மரத்திற்கு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும். அமராவதி அணையின் பாசனப் பகுதிகளில் ஒரு போக நெல் சாகுபடிகூட செய்யமுடியாத நிலை இருந்து வருகிறது. அணையில் நீர் இருப்பை கூட்ட வேண்டியது அவசியமாகிறது. எனவே முதற்கட்டமாக அணையை தூர்வார நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அணையின் கொள்ளளவு 4 டி.எம்.சி யாக இருப்பதை அதிகப்படுத்த அணையின் உயரத்தை உயர்த்தி கட்டி 8 டி.எம்.சி தண்ணீரை தேக்கி வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காங்கயம் இன மாடுகள் விரைவாக அழிந்து வருவதை அரசு கவனத்தில் கொண்டு, காங்கயம் இன மாடுகள் வளர்ப்புக்கு மானியம் வழங்கி ஊக்குவிக்க வேண்டும். காங்கயம் இன காளைகள் பயன்படுத்தப்படும் ஜல்லிக்கட்டு, ரேக்ளா போன்ற பாரம்பரிய விளையாட்டுகளுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கடந்த சட்டப்பேரவை தேர்தலின் போது முதல்வர் ஜெயலலிதா தனது தேர்தல் வாக்குறுதியில் கள்ளுக்கான தடை நீக்கப்படும் என அறிவித்திருந்தார். ஆட்சிப் பொறுப்பேற்று 3 ஆண்டு காலம் ஆகியும் கள்ளுக்கான தடை நீக்கப்படவில்லை. உடனடியாக தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் பலத்த மழைக்கு அனைத்து அணைகளும் நிரம்பியதால், பாதுகாப்பு கருதிதான் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது. முறையாக வழங்கப்பட வேண்டிய 94 டி.எம்.சி தண்ணீரை கர்நாடக அரசு வழங்காததால் இந்த ஆண்டு குறுவை சாகுடி செய்ய முடியாமல் போனது எனவே தமிழக அரசு காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை அமல்படுத்த உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## <u>அமராவதி கால்வாயில் தண்ணீர் திருட்டு கடைமடை விவசாயம் பாதிப்பு</u>

உடுமலை, : தென்னை மற்றும் நிலுவை பயிர்களை காக்க அமராவதி அணையில் இருந்து பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால் பெரும்பாலான விவசாயிகள் மோட்டார் பம்ப் வைத்து தண்ணீரை திருடுவதால் கடைமடை

நிலத்துக்கு தண்ணீர் செல்வதில்லை. இதனால் ஆவேசம் அடைந்த விவசாயிகள் தண்ணீரை திருடும் மோட்டார் பம்புகள், குழாய்களை தீயிட்டு கொளுத்துவோம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். உடுமலை அருகே அமராவதி அணையில் இருந்து திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்குகிறது. ஆண்டுதோறும் ஜூன் முதல் மார்ச் வரை பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆற்று வழியாகவும், செப்டம்பர் முதல் ஜனவரி வரை புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. மழை போதிய அளவு பெய்யாததாலும், அடிக்கடி பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுவதாலும் பிரதான கால்வாய் பாசனம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது அணையில் ஓரளவு தண்ணீர் இருப்பதால் தென்னைகளை காக்கவும், கால்நடைகளுக்கு குடிநீர் கிடைக்கவும் பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். மேலும் பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்க கோரி கடந்த 23ம் தேதி மடத்துக்குளம் நால்ரோட்டில் அனைத்துக் கட்சியினர் போராட்டம் நடத்தினர். இதைத்தொடர்ந்து பிரதான கால்வாயில் கடந்த 1ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இதை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென விவசாயிகளுக்கு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பிரதான கால்வாய் பாசனம் மூலம் மாவட்டத்தில் 25250 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. பிரதான கால்வாயில் திறக்கப்பட்ட தண்ணீர் தாராபுரம் தாலுகாவில் உள்ள கோவிந்தாபுரம் வரை சுமார் 64 கி.மீட்டர் தூரத்துக்கு செல்கிறது. இதில் கடைமடை பகுதிக்கு தண்ணீர் சரியாக வருவதில்லை. குமரலிங்கம் உள்ளிட்ட பகுதிகளில் பெரும்பாலான விவசாயிகள் மோட்டார் பம்ப் பொருத்தி நீண்ட ஓஸ் போட்டு தண்ணீரை திருடுவதால் கடைமடை பகுதிக்கு தண்ணீர் வருவதில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். தண்ணீர் திருட்டை தடுக்க செல்லும் அதிகாரிகள் மிரட்டப்படுவதாகவும், போலீசில் இதுகுறித்து புகார் அளித்தால் அதை அவர்கள் கண்டு கொள்வதில்லை என்றும் வேதனைப்படுகின்றனர். தண்ணீர் திருட்டை தடுக்க தவறினால் பாதிக்கப்பட்ட

கடைமடை விவசாயிகள் நேரடியாக களத்தில் இறங்கி தண்ணீர் திருட பயன்படுத்தப்படும் மோட்டார் பம்புகள், ஓஸ்(ரப்பர் குழாய் கள்) ஆகியவற்றை தீயிட்டு கொளுத்துவோம் என கூறியுள்ளனர்.

## <u>சோலார் மின்மோட்டாருக்கு ரூ.3.8 லட்சம் மானியம்</u>

பல்லடம், : பல்லடம் அருகே நடைபெற்ற அட்மா கூட்டத்தில், சோலார் மின்மோட்டார் பொருத்துவதற்கு அரசு சார்பில் ரூ. 3 லட்சத்து 80 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.பல்லடத்தை அடுத்துள்ள சுல்தான்பேட்டை ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கில் வட்டார அட்மா விவசாயிகள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட ஊராட்சித் தலைவர் கனகராஜ் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் வடிவேல் முன்னிலை வகித்தார். அட்மா வட்டார தொழில்நுட்ப மேலா ளர் மலர்விழி வரவேற்றார்.கூட்டத்தில், அட்மா தலைவர் ஜல்லிபட்டி ராமசாமி பேசுகையில், 'வருகிற செப்டம்பர் மாதம் பாப்பம்பட்டி, ஜல்லிப்பட்டி, செஞ்சேரிமலை, குமாரபாளையம், வதம்பச்சேரி, வடவேடம்பட்டி, சுல்தான்பேட்டை ஆகிய இடங்களில் விவசாயிகள் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்படும் விவசாயிகளின் நலன் கருதி சோலார் மின்மோட்டார் பொருத்துவதற்கு அரசு ரூ 3 லட்சத்து 80 ஆயிரம் மானியம் வழங்குகிறது. இதுதவிர டிராக்டர், ஸ்பிரேயர் உள்ளிட்ட உபகரணங்களுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. இதை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்றார். இந்த கூட்டத்தில் குமாரபாளையம் ஊராட்சித் தலைவர் முத்துமாணிக்கம், வதம்பச்சேரி ஊராட்சித் தலைவர் ராஜாமணி, ஒன்றிய கவுன்சிலர் ரத்தினம், செலக்கரச்சல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவர் கருப்பசாமி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அவிநாசியில் அரசு கல்லூரி அமைக்க விவசாய தொழிலாளர் சங்கம் வலியுறுத்தல்

அனுப்பர்பாளையம், ; தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் 8வது ஒன்றிய மாநாட்டில் அவிநாசியில் அரசு கல்லூரி அமைக்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ் மாநில விவசாயத்தொழிலாளர் சங்க அவிநாசி ஒன்றிய 8வது மாநாடு வேலாயுதம்பாளையத்தில் நேற்று நடந்தது. சங்கத்தின் ஒன்றிய தலைவர் விஜயராகவன் தலைமை வகித்தார்சி மாவட்டத்தலைவர் மோகன் .யு.டி.ஐ.ஏ . செல்வராஜ் .கொடியை ஏற்றி மாநாட்டை துவக்கி வைத்தார், கருப்பசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர் . மாநாட்டில், மத்தியில் புதிதாக பொறுப் பேற்றுள்ள பாஜக அரசு நிதி ஒதுக்காததால் 00 நாள் வேலை திட்டம் பாதிக்கும் நிலை உருவாகி உள்ளது இத்திட்டத்தில் வேலை .100 நாள் என்பதை 200 நாளாக உயர்த்தி, ஒரு நாள் ஊதியமாக ரூ .200 வழங்க வேண்டும். அவிநாசி அத்திக்கடவு திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும்பொது மக்கள் நலன் கருதி வளர்ந்து . வரும் நகரங்களானசேவூர், கருவலூர் ஆகிய பகுதியில் பேருந்து நிலையம் அமைக்கவேண்டும்மாணவர்கள் உயர் கல்வி பயில அவிநாசியில் அரசு கலை ., அறிவியல் கல்லூரி மற்றும் அரசு பொறியியல் கல்லூரிகளை அமைக்கவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் திருப்பூர் மாவட்ட ஏஐடியுசி பொதுச்செயலாளர் பழனிசாமி, அவிநாசி ஒன்றிய செயலாளர் இசாக், ஏதொழிற்சங்க நிர்வாகிகள் சண்முகம் .சி.யு.டி.ஐ., கோபால், பழனிசாமி, மாதர் சங்க ஒன்றிய செயலாளர் லிஸ்தனிஸ்லாஸ், விவசாயிகள் சங்க செயலாளர் ராமசாமி, இளைஞர் பெருமன்ற செயலாளர் அருண் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## விளாத்திகுளத்தில் மானிய விலையில் வேளாண் இடுபொருட்கள் பெறலாம்

விளாத்திகுளம், : விளாத்திகுளம் வட்டார பகுதி விவசயிகள் மானிய விலையில் வேளாண் இடுபெருட்களை பெறலாம் என விளாத்திகுளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்திராணி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும்

கூறியதாவது: 2014 - 2015ம் ஆண்டின் வடகிழக்கு பருவமழை துவங்க சில மாதங்களே உள்ள நிலையில் விவசாயிகள் தங்கள் நிலங்களை கோடை உழவு செய்வதுடன் தங்கள் நிலங்களில் ஆட்டுகிடை, மக்கிய குப்பை, தொழு உரங்கள் போன்ற இயற்கை அங்கக உரங்களை நிலங்களுக்கு இடுவதன் மூலம் அங்கக கரிமச்சத்தின் அளவை அதிகரிக்க முடியும். யூரியா டிஏபி போன்ற ராசயன உரங்களை அதிக அளவில் மண்ணில் இடுவதை தவிர்த்து மண்ணின் தன்மைக்கேற்ப தேவையறிந்து பேரூட்டச்சத்துக்கள் இடுவதன் மூலம் உர செலவு குறைவதுடன் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். மேலும் எல்லா பயிர்களுக்கும் மிக குறைந்த அளவில் தேவைப்படும் அனைத்து நுண்ணூட்ட சத்துகளும் அடங்கிய நுண்ணூட்ட கலவை இடுவது மிகவும் அவசியம் நடப்பபாண்டு விவசாயத்திற்கு தேவையான நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரங்கள் பயிறு ஒண்டர், உளுந்து, பாசி விதைகள் போன்ற அனைத்து இடுபொருட்களும் விளாத்திகுளம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் வழங்க இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் கலெக்டரின் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் வழங்கப்பட்டுள்ள தார்பாலின் (30 * 15) அளவில் சிறு குறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியவிலையில் வழங்குவதற்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தார்பாலின் தேவைப்படும் சிறு குறு விவசாயிகள் உடனடியாக விளாத்திகுளம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயன் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>காரைக்கால் கோயிலில் விதைத்தெளிப்பு நிகழ்ச்சி</u>

காரைக்கால், : பயிர் கள் செழிப்புடன் வளரவும், உணவு பஞ்சமின்றி ஊர் செழிக்கவும், காரைக்கால் திருத்தெளிச்சேரி எனும் தலத்தெரு ஸ்ரீசிவலோக நாதசுவாமி கோயிலில் விதைத்தெளி உற்சவ பெருவிழா நடைபெற்றது. காரைக்கால் திருத்தெளிச்சேரி எனும் தலத்தெரு மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் முன்னொரு காலத்தில் நீண்ட காலமாக மழை இல்லாமல் மக்கள் வறுமையில் வாடினர். உணவுப்பயிர்கள் விளைச்சலின்றி நலிந்து போயின. உணவு பஞ்சம் ஏற்பட்டு ஜீவராசிகள் மடிய தொடங் கின. அப்பொழுது மக்கள்

இறைவனை வேண்ட, ஈசன் உழவுப்படை சூழ உழவுத்திருமேனியாகி, நெற்கழனிகள் பக்கம் நேரில் சென்று உழுது விதை தெளித்து கரையேறினார் என்றும், அதுசமயம் மழை பெய்யத்துவங்கி நீர்வளம் பெருகியதாகவும், மக்கள் வறுமை நீங்கி மகிழ்வுடன் வாழ்ந்ததாகவும் வரலாறு. இறைவன் உழவனாக வந்து விதை தெளித்த வரலாற்றை வருடந்தோறும் நினைவு கூரும் வகையில், காரைக்கால் திருத்தெளிச்சேரி எனும் தலத்தெரு ஸ்ரீசிவலோகநாதசுவாமி தேவஸ்தானத்தில், நேற்று விதைத்தெளி உற்சவ பெருவிழா நடைபெற்றது. விழாவை முன்னிட்டு, அம்மாள் சமேத சுவாமி ரிஷப வாகனத்தில் வீதியுலா வரும் நிகழ்ச்சியும், கோவில் நந்தவனத்தில் கோவில் அறங்காவல் குழுவினர் மற் றும் பக்தர்கள் விதைத்தெளிப்பு நிகழ்ச்சியை நடத்தி சுவாமியை வழிப்பட்டனர்.

## <u>சிவகங்கையை குளிர்வித்த மழை</u>

சிவகங்கை,: சிவகங்கை, காளையார்கோவில் பகுதிகளில் நேற்று மாலை கனமழை பெய்தது. சிவகங்கை மாவட்டத்தில் கோடை காலம் முடிவடை ந்தும் கடுமையான வெயில் அடித்து வந்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதியடைந்து வந்தனர். இந்நிலையில் நேற்று மாலை சிவகங்கை, காளையார்கோவில் பகுதியில் கன மழை பெய்தது. நேற்று முன்தினம் மானாமதுரையில் கன மழை பெய்தது. திருப்புவனம் பகுதியில் லேசான சாரல் மழை பெய்தது. இதையடுத்து வெப்பம் ஓரளவு கட்டுப்படுத்தப்படும். விவசாய கண்மாய்களுக்கு நீர் செல்லும் வகையில் மழை இல்லாவிட்டாலும் குளங்களில் சிறிதளவு நீர் தேங்கியுள்ளது. இந்த மழையால் வரும் நாட்களில் வெயிலின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டில் இருக்கும் என பொதுமக்கள் தெரிவித்தனர்.

## <u>திருவாரூர் மாவட்டத்திற்கு தண்ணீர் வருவதற்குள் நேரடி நெல் விதைப்பு பணிகளை முடிக்க வேண்டும்வேளாண் இயக்குனர் அறிவுறுத்தல்</u>

திருத்துறைப்பூண்டி,:திருவாரூர் மாவட்டத்திற்கு தண்ணீர் வருவதற்குள் நேரடி நெல் விதைப்புபணிகளை முடிக்க வேண்டும் என்று வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன் விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார். கடந்த 9 ம்தேதி முதல் 23 தேதி முடிய திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சம்பா சாகுபடி

தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்படுகிறது. இதன்படி நேற்று திருத்துறைப்பூண்டி அருகே உள்ள மணலி கிராமத்தில் முகாம் நடைபெற்றது. கலெக்டர் மதிவாணன் தலைமை வகித்தார். வேளாண்மை இயக்குனர் முனைவர் ராஜேந்திரன் நேரடி நெல் விதைப்பு இயந்திரம் மூலம் விதைப்புப் பணியை துவக்கி வைத்தார். பின்னர் நிருபர்களிடம் கூறுகையில் காவிரி நீர் நமது மாவட்டத்திற்கு வருவதற்கு முன்னதாகவே நேரடி விதைப்பு பணிகளை முடிப்பது அவசியமாகும், மேலும் நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகள் லேசர் இயந்திரம் மூலம் நிலத்தை சமன்படுத்திய பின்னர் நேரடி நெல் விதைப்பு இயந்திரம் மூலம் விதைப்பு செய்யும் போது திருந்திய நெல் சாகுபடி முறையில் செயல்படுத்தியது போல் களை எடுக்கும் பணியை கோனோவீடர் மற்றும் இயந்திர களை அறுக்கும் கருவியை பயன்படுத்தி எளிதில் மேற் கொள்ளலாம். பயிர் எண்ணிக்கை சரியாக பராமரிக்கப்படுவதால் மகசூல் அதிகரிக்கும் ஒரு ஏக்கருக்கு 12 கிலோ விதை மட்டுமே தேவைப்படும். லேசர் சமன்படுத்தும் இயந்திரம் மூலம் நிலத்தை சமன்படுத்துவதால் பாசன நீர் சீராக நிலத்தில் நிறுத்தப்படுவதால் நெற்பயிர் தூர் கட்டும் திறன் அதிகரிக்கிறது. சாகுபடிக்கு தேவையான பாசன நீர் குறைகிறது. இடும் உரம் பயிருக்கு முழுமையாக கிடைத்திட வழிவகுக்கிறது என்றார். அவரிடம் டெல்டா பகுதிக்கு ஏற்ற ரகம் சிஆர் 1009 விதை நெல்லுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானியம் வழங்கப்படுவதில்லை. மானியம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகனன், துணை இயக்குனர் நடேசன், உதவி இயக்குனர் சிவகுமார், ஒன்றிய குழு தலைவர் வேதநாயகி சிங்காரவேலு, தாசில்தார் மதியழகன், ஊராட்சி தலைவர் குணமணி, மக்கள் தொடர்பு அலுவலர் நல்லதம்பி மற்றும் வேளாண்மை துறை அதிகாரிகள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>வேளாண்மை அறிவியல் நிலையத்தில் புதிய ரக நெல் அறிமுக விழா கலெக்டர் பங்கேற்பு</u>**



நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் புதிய ரக நெல் அறிமுக விழா நடைபெற்றது. விழாவில் கலெக்டர் மதிவாணன் கலந்து கொண்டார். புதிய ரக நெல் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வெள்ள பாதிப்பை தாங்கி வளரும் சி.ஆர்.1009 சப்-1 என்ற புதிய நெல் ரகம் அறிமுக விழா நடந்தது. விழாவுக்கு கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கினார். கோவை வேளாண்மை பல்கலைகழக துணைவேந்தர் ராமசாமி முன்னிலை வகித்தார். தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன்¢, கூட்டுறவு இணைப்பதிவாளர் ரவிசந்திரன், காவிரி பாசன விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த ரெங்கநாதன், நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் சோழன் மற்றும்

அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். கலெக்டர் மதிவாணன், விவசாயிகளுக்கு புதிய ரக நெல்லை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- வெள்ள பாதிப்பு டெல்டா பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் புதிய ரக நெல் சி.ஆர்.1009 சப்-1 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது உள்ள சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் புதிய ரக நெல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நெல் வெள்ள பாதிப்புகளை தாங்கி நிற்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் இந்த புதிய ரக நெல் விதையை நன்கு பயன்படுத்தி, அதிக மகசூல் பெற வேண்டும். உணவு உற்பத்தியில் திருவாரூர் மாவட்டம் முன்னிலை பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## மேட்டூரில் இருந்து தண்ணீர் திறந்த முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு பாராட்டு பாபநாசம் ஒன்றியக்குழு கூட்டத்தில் தீர்மானம்

பாபநாசம், விவசாயிகளின் நலன் கருதி மேட்டூரில் இருந்து தண்ணீர் திறந்த ஜெயலலிதாவுக்கு பாராட்டு தெரிவித்து பாப நாசம் ஒன்றியக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒன்றியக் குழு கூட்டம் பாபநாசம் ஒன்றியக் குழு கூட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடை பெற்றது. கூட்டத்திற்கு ஒன் றியக்குழுத் தலைவர் கோ பிநாதன் தலைமை தாங் கினார். பொறியாளர்கள் விஜயக் குமார், வளையாபதி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆணையர் பாலமுரளி வரவேற்றார். கூட்டத்தில் உமையாள்புரம் ஊராட்சியில் ரூ.2½ லட்சத்தில் குடிநீரை சுத்திகரிப்பு செய்வது. திருமண்டங்குடி ஊராட்சி அனுமாநல்லு£ர் குளக்கரையில் ரூ.2 லட்சம் செலவில் ஒன்றிய பொது நிதியில் இருந்து மதகு அமைப்பது. ராமானுஜபுரம் ஊராட்சியில் காவிரி ஆற்றில் ரூ.3 கோடியே 56 லட்சத்தில் தடுப்பணை அமைத்து தந்த முதல்-அமைச்சர் ஜெயலி தாவுக்கு நன்றி¬யும், பாராட் டையும் தெரிவித்து கொள்வது. ஜெயலலிதாவுக்கு பாராட்டு கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணை கட்ட உத்தரவிட்ட மற்றும் விவசாயிகளின் நலன் கருதி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்க உத்தரவிட்ட ஜெயலலிதாவுக்கு பாராட்டும், நன்றியும் தெரிவிப்பது என்பன உள் ளிட்ட பல்வேறு தீர் மானங்கள் நிறைவேற்றப் பட்டன. கூட்டத் தில் ஒன்றியக்குழு உறுப்பினர் கள், பணி மேற்பார் வையாளர் கள்,

ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கிராம ஊராட்சிகள் ஆணையர் ஸ்ரீராம் நன்றி கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வேளாண் திருட்டை தடுக்கும் 'பூமி பாதுகாப்பு சங்கம்' - குமரி மாவட்ட விவசாயிகள் துயர் துடைப்பு**

விவசாயிகள் விழிப்புணர்வு சங்கம், தென்னை விவசாயிகள் சங்கம், விவசாய கூட்டுறவு சங்கம் என பல்வேறு விவசாய அமைப்புகள் மூலம் அரசு செய்ய முடியாத பல்வேறு சாதனைகளை விவசாயிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக செய்து வருகின்றனர். அந்த வகையில், குமரி மாவட்ட விவசாயிகளுக்கு பாதுகாப்பு அரணாக இருந்து வருகிறது பூமி பாதுகாப்பு சங்கம். விளை பொருட்களுக்கு கட்டுப்படியான விலையின்மை, பயிர்களில் பூச்சி, நோய் தாக்குதல், பருவநிலை மாற்றத்தால் மகசூல் இழப்பு என பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும், விளைவித்த விளைபொருட்கள் திருடு போய் விட, கொதித்தெழுந்த விவசாயிகள் உருவாக்கியது தான் பூமி பாதுகாப்பு சங்கம்.


**விளை பொருட்கள்**

இது குறித்து குமரி மாவட்ட பூமி பாதுகாப்பு சங்கத் தலைவர் டாக்டர் பத்மதாஸ் கூறும்போது, "சுதந்திரம் பெற்றதும் வெள்ளையர்களிடம் இருந்து நாட்டை காப்பாத்திட்டோம். ஆனால், கொள்ளையர்களிடம் இருந்து குமரி மாவட்ட விவசாய விளைபொருட்களை காப்பாற்ற முடியல. தென்னையில் தேங்காய், இளநீரையும், வாழையில் வாழை குலையையும் பறிகொடுத்து விட்டு இடிஞ்சு போயிட்டாங்க குமரி மாவட்ட விவசாயிகள். இது போதாத குறையாக மலை பகுதிகளை ஒட்டியுள்ள தோட்டங்களில் கால்நடைகளும், காட்டு விலங்குகளும் புகுந்து அதுங்க பங்குக்கு மகசூலை அழிக்க ஆரம்பிச்சுடுச்சு. ஆனாலும், திருடர்கள் தொல்லை தான் ரொம்ப கொடூரமா இருந்துச்சு. இப்ப மாதிரி அப்ப வீட்டுக்கு, வீடு தங்கம், வெள்ளின்னு இருக்காது. ஆனால், ஊருக்கு, ஊரு செழிப்பா வெள்ளாமை

நடந்துச்சு. அதனால திருடங்களோட ஒரே குறிக்கோள் விளைபொருட்களை திருடி சந்தையில் விற்பது தான். **திருட்டை தடுக்க உதயம்** இதையெல்லாம் பார்த்து ஆதங்கப் பட்ட 'ஈத்தாமொழி' பகுதி விவசாயிகள் முதன்முதலில் கடந்த 1953-ம் ஆண்டு ஈத்தாமொழி பூமி பாதுகாப்பு சங்கத்தை தொடங்கினார்கள். அந்த விதை தான் இன்னிக்கு வளர்ந்து ஆலமரமாக நிக்குது. இப்ப கன்னியாகுமரி மாவட்டத்தில், 20-க்கும் மேற்பட்ட பூமி பாதுகாப்பு சங்கங்கள் உள்ளன. எங்க சங்கத்தோட முக்கிய வேலையே விவசாயத்தையும், விளைபொருட் களையும் பாதுகாப்பது தான். விளை பொருட்கள் திருடு போகாமல் இருக்க ஒவ்வொரு சங்கத்திலும், 5 முதல் 50 காவலாளிகள் வரை வேலைக்கு வச்சுருக்கோம். காக்கி உடையில் காவலுக்கு நிற்கும் இவங்க சங்க கட்டுப்பாட்டில் வரும் பல்வேறு பகுதிகளுக்கும் இரவு, பகல் பாராமல் ரோந்து போய் கண்காணிப்பார்கள். இதனால், எங்க மாவட்டத்தில் ஆடு, கோழின்னு கால்நடை திருட்டு, மோட்டார் ஒயர் திருட்டு, விவசாய விளைபொருள்கள் திருட்டுன்னு எந்த குற்றமும் இப்ப இல்ல. குமரி மாவட்டத்தில் எந்த காவல் நிலையங்களிலும் விவசாயம் சம்பந்தமான வழக்குப்பதிவே கிடையாது. **கூலியாக விளை பொருள்** இதற்காக தென்னை வசாயமாக இருந்தால் ஏக்கருக்கு 20 தேங்காயும், வாழையில் குலைக்கு 5 ரூபாயும், நெல் ஒரு ஏக்கருக்கு 10 கிலோவும் (ஒரு பருவத்திற்கு), மரவள்ளி கிழங்கு க்கு ஏக்கருக்கு ரூ.500 ரூபாயும் விவசாயிகளி டம் இருந்து கட்டணமாக வசூலிக்கிறோம். வாழை, மரவள்ளி போன்ற பயிர்களை ஆடு தின்றால் கூட நஷ்ட ஈடு கொடுக்கிறோம். விளைபொருள்களை திருடர்கள் திருடி விட்டால், உடனே அதன் மதிப்பிற்குரிய தொகையை சங்கத்தின் மூலம் கொடுத்திடுவோம். அந்த பணத்தை காவலாளிகளின் சம்பளத்தில் இருந்து புடிச்சுக்குவோம். அப்ப தான் அவர்கள் பொறுப்புணர்வோட வேலை பார்ப்பாங்க. திருடர்கள் சிக்கும்போது இழப்பீடு தொகையை அவர்களிடம் வசூலிச்சு காவலாளிகளுக்கு கொடுத்திடுவோம்.

**பிரச்சினைக்கு தீர்வு** இது மட்டுமில்லாமல் விவசாயிகளின் எல்லை பிரச்சினையில் இரு தரப்பினரையும் கூப்பிட்டு பேசி சமரசம் செய்வதில் தொடங்கி, எல்லா விவசாய பிரச்சினை களுக்கும் தோள் கொடுக்குறோம். பாசன நீர் விவகாரம் தொடங்கி, குமரி மாவட்ட விவசாயிகள் சந்திக்கும் பல்வேறு சிக்கல்களுக்கும் போராட்டங்களையும் நடத்தி வருகிறோம்" என்றார். வெள்ளமோடி பூமி பாதுகாப்பு சங்கத்தில் 630 உறுப்பினர்கள் உள்ளனர். இது குறித்துசங்க உறுப்பினர் ஒருவர் கூறும்போது, "முன்பு உழுதவனுக்கு உழக்கு கூட மிஞ்சாத அளவுக்கு திருட்டு

நடந்தது. அதையெல்லாம் பார்த்துட்டு, 1972- ல் எங்க வெள்ளமோடி பகுதியில் பூமி பாதுகாப்பு சங்கத்தை தொடங்கினோம். எங்க சங்கத்தைச் சேர்ந்த பகுதி விவசாயிகளின் பிரதான சாகுபடி தென்னை தான். ஆனால், இன்று தென்னை ஏறக் கூட போதிய வேலையாட்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகளுக்கு நவீன கருவி மூலம் தென்னை மரம் ஏறும் பயிற்சியை கொடுத்திட்டுருக்கோம். சங்க உறுப்பினர்கள் விவசாய விளைபொருள்களின் மூலம் கொடுக்கும் வருவாயின் மூலம் பத்து காவலர்களை நியமிச்சுருக்கோம். இவங்க இரவு நேரத்தில் விளைபொருள்கள் திருடு போகாமல் பாதுகாப்பு கொடுப்பாங்க. சங்க வருவாய் மூலம் மருந்து தெளிப்பான், கல்யாண வீடுகளுக்கு வாடகைக்கு விட இருக்கைகள் வாங்கி போட்டுருக்கோம். விவசாயிகளின் இல்ல விசேஷத்துக்கு அதை குறைவான வாடகைக்கும் கொடுக்கிறோம். சங்கம் சார்பில் திருமண மண்டபம் கட்டியிருக்கோம்" என்றார். அரசை நம்பி பொழுதை கழிக்காமல் விவசாயிகளே ஒன்று கூடி இழுத்துக் கொண்டிருக்கும் இந்த ரதம் இப்போது போல் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்க வாழ்த்திவிட்டு வந்தோம்.



**மரம் ஏற பயிற்சி அளிக்கும் பூமி பாதுகாப்பு சங்கத் தலைவர் பத்மதாஸ்**